Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 182

சனிக்கிழமை 27 மே 2023

வைகாசி 13 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



யாழ். தையிட்டியில்

# பொலிஸின் அராஜகச் செயல்; உடன் விசாரணை தேவை

நாடாளுமன்றில் கஜேந்திரகுமார் காட்டம்

**கொழும்பு, மே 27**

**யாழ்ப்பாணம் - தையிட்டி, பொலிஸ் அராஜகத்துக்குரிய பகுதியாக மாறியிருக்கின்றது. தையிட்டியில் சட்டத்துக்குப் புறம்பான வகையில் அமைக்கப்பட்ட விகாரையை அகற்றுமாறு நடத்தப்பட்ட மக்கள் போராட்டம் மிகமிக மோசமான வகையிலும் கீழ்த்தரமான வகையிலும் பொலிஸாரால் அடக்கப்பட்டிருக்கின்றது. இது தொடர்பில் விசாரணையொன்று உடனடியாக முன்னெடுக்கப்படவேண்டும் என்று தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.**

»11



## நாடு முன்னேற வேண்டுமெனில் நிரந்தர அரசியல்தீர்வு தேவை!

சஜித்திடம் சம்பந்தன் வலியுறுத்து

கொழும்பு, மே 27
நாடு முன்னேறவேண்டுமெனில் நிலையான - நிரந்தர அரசியல் தீர்வு விரைந்து காணப்படவேண்டும் - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் நேரில் எடுத்துரைத்தார் தமிழரசுக்கட்சியின்

»11

## தமிழரசுக் கட்சியின் தலைமைக்குத் தயாராம்

சி.வீ.கே. சிவஞானத்துக்கு வந்த ஆசை

யாழ்ப்பாணம், மே 27
அனைவரும் ஏகமனதாகத் தெரிவுசெய்தால், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமையை ஏற்கத் தயாராக உள்ளேன் என தமிழரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவர் சி.வீ.கே.

»11

## மாணவர்கள் மீது தாக்குதல்: ஆசிரியர் பொலிஸாரால் கைது!

யாழ்ப்பாணம், மே 27
வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை ஒன்றில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர், அதே பாடசாலைச் சேர்ந்த மூன்று மாணவர்களைக் கொடூரமாகத் தாக்கிய குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

»11

## ஹெரோய்னுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், மே 27
கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் பகுதியில் 2 கிராம் 150 மில்லிகிராம் ஹெரோய்னுடன் இளைஞர் ஒருவர் நேற்று வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார். உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் பொலிஸார் மேற்கொண்ட சோதனை

»11

## முதியவரொருவர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், மே 27
இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், தூக்கிலிருந்து முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். உத்தரவேல் புவனேந்திரன் (வயது - 65) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

»11

## மருந்துத் தட்டுப்பாடு நாட்டில் அதிதீவிரம்!

கொழும்பு, மே 27
நாட்டில் மருந்துத் தட்டுப்பாடு மிகையாக அதிகரித்துள்ளது. 120 வகையான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனினும், அரசாங்கம் இந்த விடயத்தைத் தொடர்ந்தும் அலட்சியம் செய்து வருகின்றது என்று மருத்துவ அமைப்புகள் பல இணைந்து குற்றஞ்சாட்டியுள்ளன.
இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவரான மருத்துவர் வின்யா ஆரியரத்ன இது

»11

## வயிற்றுவலியால் அவதி பெண் குழந்தை இறப்பு!

யாழ்ப்பாணம், மே 27
வயிற்றுவலியால் பாதிக்கப்பட்ட 3 வயதுப் பெண் குழந்தையொன்று சிகிச்சை பயனளிக்காமல் நேற்று உயிரிழந்தது.

»11

## ஜனாதிபதிக் களத்தில் ஜனக ரத்நாயக்க!

விரிவு பக். 02

## இலங்கை ரூபா: பெறுமதி உயர்வு



கொழும்பு, மே 27
அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வலுவடைந்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கியின் தரவுகள் தெரிவிக்கின்றன.
இதன்படி நேற்று டொலரின் கொள்வனவு விலை 295.63 ரூபாவாகவும், விற்பனை விலை 308.54 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# 100 பொருள்களுக்கான இறக்குமதித் தடைநீக்கம்

## செஹான் சேமசிங்க தெரிவிப்பு

**கொழும்பு, மே 27**
**ஜூன் மாதம் முதலாம் வாரத்தில் 100 வகையான இறக்குமதிப் பொருள்களுக்கான தடை நீக்கப்பட உள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.**

பொருளாதார நிலைமை சீரடைந்து வருகின்ற நிலையில் இறக்குமதித் தடை படிப்படியாகத் தளர்த்தப்படும் என அரசாங்கம் ஏற்கனவே அறிவித்திருந்த நிலையில், இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.
நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க நாடாளுமன்றத்தில் இந்தத் தகவலை வெளியிட்டார்.
உள்நாட்டு சிறு மற்றும் நடுத்தர வர்த்தகங்களைப் பாதிக்காத அல்லது மேம்படுத்தும் வகையிலான பொருள்கள் மீதான தடையே நீக்கப்பட உள்ளது என்று அவர் குறிப்பிட்டார். இதற்கான உத்தியோகபூர்வ வர்த்தமானி அறிவிப்பு எதிர்வரும் நாள்களில் வெளியிடப்படும் எனவும் தெரியவருகிறது. (ஏ-இ)

# ஜனாதிபதிக் களத்தில் ஜனக ரத்நாயக்க!

கொழும்பு, மே 27
அனைத்துப் பொதுவேட்பாளர்களும் தோல்வியடைந்துள்ளதால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மக்களின் வேட்பாளராக போட்டியிடுவேன் என பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:
இலங்கையில் பல அரசியல்கட்சிகள் உள்ளன. ஆனால் அவை அனைத்தும் மக்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யத் தவறிவிட்டன.
அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு நானே பொருத்தமானவன். நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது குறித்து பகிரங்கமாக அறிவித்ததும் பல கட்சிகள் எனக்கு ஆதரவளிக்க முன்வரலாம்.
நாட்டில் தற்போது பொருத்தமான பொதுவேட்பாளர் என எவரும் இல்லை. அனைவரும் தோல்வியடைந்துவிட்டனர். ஆகவே நானே மக்களைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கான மிகவும் பொருத்தமான வேட்பாளராகக் காணப்படுவேன்-என்றார். (ஏ-இ)

# குடும்பத்தவர் மூவர் சடலங்களாக மீட்பு!

### குருநாகலில் சம்பவம்

கொழும்பு, மே 27
குருநாகல் பொலிஸ் பிரிவிலுள்ள வீடொன்றிலிருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடந்துள்ளது.
ஓய்வுபெற்ற ஆசிரியர், அவரது மகன், மகனின் மனைவி ஆகியோரே வீட்டிலிருந்து சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர் என குருநாகல் பொலிஸார் தெரிவித்தனர்.
தம்பதியர் இருவரும் அறையினுள் வாந்தி எடுத்த நிலையிலும் குடும்பஸ்தரின் தந்தையான ஓய்வுபெற்ற ஆசிரியர் அந்த வீட்டிலுள்ள மரமொன்றில் தூக்கிலிருந்தும் மீட்கப்பட்டுள்ளனர்.
சடலங்கள் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக குருநாகல் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன.
குடும்ப உறுப்பினர்கள் மூவரும் உயிரிழந்தமைக்கான காரணம் இதுவரை தெரியவில்லை எனவும் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன எனவும் குருநாகல் பொலிஸார் தெரிவித்தனர். (ச-22)

# சேவை உரிமங்களை சினோபெக் மாற்றாது

### வெளியான தகவல்களை மறுத்து அறிக்கை

கொழும்பு, மே 27
இலங்கையில், எரிபொருள் விற்பனை செய்வதற்கு வேறு வெளி நிறுவனங்களைப் பயன்படுத்துவதாக வெளியான செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என சீனாவின் சினோபெக் நிறுவனம் தெரிவித்துள்ளது.
இலங்கையில் எரிபொருள் விற்பனை செய்வது தொடர்பில் சீனாவின் சினோபெக் நிறுவனத்துடனான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது என்று அண்மையில் அரசாங்கம் அறிவித்தது.
அதையடுத்து சினோபெக் நிறுவனம் எரிபொருள் விற்பனை செய்வதற்கு வேறு வெளி நிறுவனங்களைப் பயன்படுத்தவுள்ளது என்று தகவல்கள் வெளியாகின. அந்தத் தகவல்களை மறுத்துள்ள சினோபெக் நிறுவனம், தமது வணிகத்துக்காக மூன்றாம் தரப்பினரைத் தொடர்புகொள்ளவில்லை எனக் குறிப்பிட்டுள்ளது.
தமது எரிவாயு நிலையங்களுக்கான சேவை உரிமைகளை வேறு எந்தத் தரப்பினருக்கும் மாற்ற விரும்பவில்லை என்றும், தனது வர்த்தக நாமத்தின் நற்பெயரைப் பாதுகாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் சினோபெக் நிறுவனம் அறிவித்துள்ளது. (ஏ-இ)

# மோசடியாளர்களை பாதுகாக்கும் பந்துல

### நுகர்வோர் அதிகாரசபையின் முன்னாள் இயக்குநர் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 27
எரிவாயு சிலிண்டர் மோசடி, வெள்ளைப்பூண்டு மோசடி உட்படப் பல ஊழல் விவரங்களை அம்பலப்படுத்தியது போன்று, பல மோசடிகளில் ஈடுபட்ட அதிகாரிகளின் பெயர்களை வெளியிடத் தயார் என்று நுகர்வோர் அதிகாரசபையின் முன்னாள் இயக்குநர் துசான் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.
கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
ரின் மீன், வெள்ளைப் பூண்டு மோசடி, எரிவாயு சிலிண்டர் மோசடி தொடர்பான தகவல்கள் அம்பலமாகியுள்ளபோதும், இந்த மோசடிகளில் ஈடுபட்ட அதிகாரிகள் இன்னமும் அதே பதவிகளில் உள்ளனர். பந்துல குணவர்த்தன தனது நலன்களுக்காக ஊழல் அரசியல்வாதிகளைப் பாதுகாக்கின்றார்.
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த மோசடிகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். நாட்டில் இடம்பெறும் விடயங்களை நாங்கள் அலட்சியம் செய்ய முடியாது. இந்தக் காடையர்கள் தப்பிச்செல்ல அனுமதிக்க முடியாது.
என்னிடம் பல ஆவணங்கள் உள்ளன. ஐந்து வருடங்கள் தொடர்ச்சியாக அம்பலப்படுத்துவதற்கான ஆவணங்கள் உள்ளன. முக்கியமான விவரங்களை நான் பகிர்ந்துகொண்டுள்ள போதிலும் எதிர்க்கட்சியினர் மௌனம் காக்கின்றனர்.
அவர்கள் எதனையும் செய்யவில்லை. எதிர்க்கட்சித் தலைவருடன் நான் தகவல்களைப் பகிர்ந்துகொண்டேன். ஆனால் இந்த விடயங்கள் தொடர்பாக அவர் அக்கறை காட்டவில்லை- என்றார். (ஏ-இ)

# ஜப்பான் பிரதமர் கிசிடாவிடம் மன்னிப்புக் கோரினார் ரணில்

கொழும்பு, மே 27
ஜப்பானின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட கொழும்பு இலகு தொடருந்து போக்குவரத்துத் திட்டத்தை இடைநிறுத்துவதற்கு இலங்கையின் அப்போதைய அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜப்பானிய பிரதமர் ப்யுமியோ கிசிடாவிடம் மன்னிப்புக் கோரியுள்ளார்.
நல்லாட்சி அரசாங்கத்தில் முன்கொணரப்பட்ட இந்தத் திட்டம், கோத்தாபய ராஜபக்ச அரசாங்கத்தால் ஒருதலைப்பட்சமாக இரத்துச் செய்யப்பட்டது. இந்த நிலையில் டோக்கியோவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜப்பானிய பிரதமர் ப்யுமியோ கிசிடாவுக்கும் இடையில் இடம்பெற்ற உத்தியோகபூர்வ சந்திப்பின்போது,
இருதரப்பு பெரிய திட்டங்களை உடன்பாடு இன்றி நிறுத்தவோ அல்லது இரத்துச் செய்யவோ முடியாது என்பதை உறுதிப்படுத்தும் வகையில் எதிர்காலத்தில் நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றப்பட வேண்டியதன் அவசியத்தை இலங்கை ஜனாதிபதி வலியுறுத்தினார். (ஏ-இ)

# கார் விபத்தில் சிறுவன் சாவு!

கொழும்பு, மே 27
வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த சிறுவனை கார் மோதியதில் சம்பவ இடத்திலேயே சிறுவன் உயிரிழந்துள்ளான் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இந்தச் சம்பவம் இரத்தினபுரி, பலாங்கொட பொலிஸ் பிரிவில் நேற்று இடம்பெற்றுள்ளது. விபத்தில் 14 வயதுடைய சிறுவனே உயிரிழந்துள்ளான்.
விபத்தை ஏற்படுத்திய கார்ச் சாரதியை கைதுசெய்த பலாங்கொட பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரிக்கப்படவுள்ளது எரிபொருள் கோட்டா!

### எரிசக்தி அமைச்சர் தகவல்



கொழும்பு, மே 27

கியூ.ஆர். முறைமையில் தற்போது வாகனங்களுக்கு வழங்கப்படும் எரிபொருள் கோட்டா அதிகரிக்கப்படவுள்ளது என்று மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்தார்.

அடுத்த மாதம் எரிபொருள் மீளாய்வின் பின்னர் இந்த அதிகரிப்பு நடைமுறைப்படுத் தப்படும் என்றும் அவர் தெரி வித்துள்ளார். எரிபொருள் கூட்டுத்தாபனத் தின் சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தகப் பிரிவு அதிகாரிகளு டன் நடந்த சந்திப்பிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட் டுள்ளது. (எ-இ)

## வற்வரி அறவிடாமல் மீள் ஏற்றுமதி இல்லை

### நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மே 27

துறைமுகத்தில் 35 சதவீதம் பெறுமதி சேர் வரி அறவிடாமல் எந்தப் பொருள்களும் மீள் ஏற்று மதி செய்யப்படமாட்டாது. எதிர்க்கட்சித் தலைவர் முன்வைத்த விடயம் தொடர்பில் விசேட கவனம் செலுத்துவோம்.

இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ துறை முகத்தின் ஊடாக மீள் ஏற்றுமதியின்போது முறை யான பெறுமதி சேர் வரி அறவிடப்படுவதில்லை எனக் குறிப்பிட்டார். இதற்குப் பதிலளிக்கும்போதே நிதி இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

துறைமுகத்தின் ஊடாக மீள் ஏற்றுமதி செய்யப்ப டும் சகல தேசிய உற்பத்திகளுக்கும் 35 சதவீத பெறுமதி சேர் வரி அறவிடப்படும். இந்த வரிக் கொள்கை முறையாகச் செயற்படுத்தப்படுகிறது. எதிர்க்கட்சித் தலைவர் முன்வைத்த விடயம் தொடர் பில் விசேட கவனம் செலுத்தி உரிய தகவல்கள் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும்.

மீள் ஏற்றுமதி செய்யப்படும் பொருள்கள் தொடர் பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஏற்று மதிக் கட்டமைப்பில் ஏற்படுத்த வேண்டிய மாற் றங்கள் தொடர்பில் உரிய தரப்புக்களுடன் பேச்சு வார்த்தை மேற்கொள்ளப்பட்டுள்ளது - என் றார். (எ-இ)

## பாடசாலை விடுமுறை!

கொழும்பு, மே 27

நாடு முழுவதும் உள்ள 10 ஆயிரத்து 146 அரச பாடசாலைகளுக்கு நேற்று முதல் விடு முறை வழங்கப்பட்டுள்ளது.

2022 ஆம் கல்வி ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதரப் பரீட்சை எதிர்வரும் 29 ஆம் திகதி முதல் அடுத்தமாதம் 8 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

அதற்காகவே பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 12ஆம் திகதி பாடசாலைகளின் கற்பித்தல் பணிகள் மீள ஆரம்பிக்கப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (எ-இ)

## ரஹீமின் பதவிக்கு வருகிறது ஆபத்து!

கொழும்பு, மே 27

தங்கம் மற்றும் கைபேசி கடத்தல் குற் றச்சாட்டுக்கு இலக்கான நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமை பதவி யில் இருந்து நீக்க வேண்டும் என்று பல தரப்புக்களும் வலியுறுத்தியுள்ளன.

அதையடுத்து நேற்றுக் கலந்தாலோ சித்த கட்சித் தலைவர்கள், நாடாளு மன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமைப் பதவி நீக்குவதற்கான பிரேரணையைக் கொண்டுவரத் தீர்மானித்துள்ளனர்.

இந்தப் பிரேரணை எப்போது, யாரால் கொண்டுவரப்படும் என்பன போன்ற விவரங்கள் வெளியாகவில்லை. (எ-இ)

### க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை

# அனுமதிப் பத்திரங்களில் திருத்தம் செய்ய அவகாசம்

கொழும்பு, மே 27

கல்விப் பொதுத் தராதர சாதா ரண தரப் பரீட்சைக்குத் தோற்ற வுள்ள பரீட்சார்த்திகளின் அனு மதிப் பத்திரங்களில் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ளப் படவேண்டுமாயின் அதற்கு கால அவகாசம் உள்ளது என்று பரீட்சைகள் திணைக்க ளம் அறிவித்துள்ளது.

ஒன்லைன் ஊடாக திருத்தங் களை மேற்கொள்வதற்கான கால அவகாசம் நிறைவடைந் துள்ளது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர கூறியுள்ளார்.

பரீட்சை அனுமதிப் பத்திரங்க ளில் திருத்தங்களை மேற் கொள்ள வேண்டுமாயின் பரீட் சைகள் திணைக்களத்துக்கு சமுகமளித்தோ அல்லது மின் நகலினூடாகவோ அதைச் செய்துகொள்ளமுடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பரீட்சை மண்டபங்களுக்கு சென்று திருத்தங்களை மேற் கொள்ள வேண்டாம் எனவும் அதனூடாக சிக்கல்களை எதிர்நோக்க நேரிடும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எச்சரித்துள்ளார்.

இதேவேளை, எவ்வித கார ணங்களுக்காகவும் சாதாரண தரப் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்களை தங்கள் வசம் வைத்துக்கொள்ள வேண்டாம் என அதிபர்களுக்கு ஆலோ சனை வழங்கப்பட்டுள்ளது.

சில பாடசாலைகளில் பல விடயங்களை அடிப்படை யாகக்கொண்டு பரீட்சைக் கான அனுமதிப் பத்திரத்தை அதிபர்கள் வழங்கவில்லை என முறைப்பாடுகள் கிடைத் துள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப் பிட்டுள்ளார். (எ-இ)




காப்பெற்றுகள் பலவிதம், அதில ஒவ்வொண்டும் ஒருவிதம் எண்டது இப்பதான் எங்கட ஆக்களுக்கு விளங்கியிருக்கு. வராது வந்த மாமணி மாதிரி, வடமராட்சி கிழக்கில இருந்து பருத்தித்துறை வரைக்குமான றோட்டை காப்பெற்றா மாத்துறதெண்டு எப்பவோ தீர்மானங்கள் எடுத்தாலும், அது நடைமுறைக்கு வர கனகாலம் எடுத்திச்சு. வடமராட்சி கிழக்கு ஏற்கனவே எல்லாவகையாலும் பாதிக்கப்பட்ட பகுதி. ஒரு ஆத்திர அவசரத்துக்கு ஆஸ்பத்திரிக்கு போறதெண்டால்கூட, ஒழுங்கான பாதை இல்லை. அதை மாதிரி வடமராட்சியில இருந்து வடமராட்சி கிழக்குக்கு முந்திப் போறதெண்டாலும் ஏதோ எவரெஸ்ட் ஏறுற மாதிரி கடும் கஷ்டம். இந்த நிலைமை யில காப்பெற் போட்டால், இதுவரைக்கும் ஒரு தனித்தீவு மாதிரி இருக்கிற வடமராட்சி கிழக்கை ஒருமாதிரி வடமராட்சியோட இறுக்கமா ஒட்டிப்போடலாம் எண்டுதான் அங்கத்தை ஆக்கள் நினைச்சவை. இனிமேல் விழுந்து எழும்பி, அலுங்கி குலுங்கிப் போற பயணத்துக்கு முடிவு எண்டும் சந்தோசப்பட்டவை.

ஒருமாதிரி காப்பெற் வேலை மருதங்கேணியில இருந்து அம்பன்வரை தொடங்கிச்சுது. அம்பனுக்கு அங்கால மருதங்கேணி வரைக்கும் கிளிநொச்சி வீதி அபிவிருத்தி அதிகாரசபையின்ர ஆளுகைக்குள்ள வாறதால அதுக்குத்தான் முதல்ல வேலை செய்யக் காசு கிடைச்சது. முதல்ல முயல் வேகத்தில தொடங்கின இந்தக் காப்பெற் வேலையை போகப்போக நத்தைகூட தோத்துப்போற அளவுக்கு ஆற அமரச் செய்து ஒரு மாதிரி முடிச்சிட்டினம். ஆனால் அவை வேலை முடிக்க முதலே கன இடங்களில காப்பெற் பல்லில்லாத பாட்டியின்ர வாய்மாதிரி ஆவெண்டு பிளந்து, பள்ளமும் திட்டியுமா மாறிப்போட்டுது. இதைப்பற்றி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலையும் சுமந்திரன் 'காப்பெற்றில கனவிதம் இருக்கோ? ஏ-9 றோட் போட்டு இன்னமும் அசையாமல் கிடக்கு. இது போட்டு முடிக்க முதலே இப்பிடி நாசமாகிட்டுதே' எண்டு கேக்க, 'அதெல் லாம் ஒரேமாதிரித்தான் போடுறது. இஞ்சத்த நிலம் கொஞ்சம் பிழை. அதுதான் இப்பிடி' எண்டு அதிகாரி மார் சொல்லிச் சமாளிச்சவை.

இப்ப அம்பனில இருந்து பருத்தித்துறை வரைக்கும் இன்னொரு கொம்பனி காப்பெற் போட்டு முடிச்சிருக்கு. அம்பனுக்கு அங்காலையும், இஞ்சாலையும் ஒரேமாதிரி நிலம்தானே. ஆனால் அம்பனில இருந்து பருத்தித்துறை மட்டும் போட்ட றோட் திறமா, கனகாலம் நிண்டு பிடிக்கிற மாதிரி போட்டிருக்கு. ஆனால் அம்பனுக்கு அங்கால மருந்தங்கேணி மட்டும் போறவை பாம்புபோற மாதிரி வளைஞ்சு நெளிஞ்சுதான் போகவேண்டியிருக்கு. அந்தளவுக்கு காப்பெற் கடகடத்துப்போய், ஒரே குண்டும் குழியுமாக் கிடக்கு. இப்பிடியே போனால் கொஞ்சக்காலத்தில முந்தி இருந்ததைவிடவும் மோசமான றோட்டா மாறிடும்.

உந்த றோட்டுப்போடுறவை இத்தினை வருசம் றோட்டு நிண்டு பிடிக்கும் எண்டு உத்தரவாதம் குடுக்கிறவை. அதுக்குள்ள றோட்டுப் பழுதாப்போனால் அவை திரும்ப போட்டுக்குடுக்க வேணும். அதால மருதங்கேணியில இருந்து அம்பன் வரைக்கும் றோட்டுப் போட்ட கொம்பனிக்காரரை திரும்ப அந்த றோட்டைப் போட்டுத்தரச் சொல்லி உரிய அதிகாரிமார் உத்தரவு போட்டிருக்கவேணும்.

ஆனால் நக்குண்டார் நாவிழந்து போய் அப்பிடி உத்தரவும் போட ஏலாதுதானே.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிப்பதுடன் உற்சாகமும் பெருக்கெடுக்கும். துணிச்சலுடன் செயற்படுவீர்கள்.

**இடபம்:** அன்பும் ஆதரவும் கிடைக்கும். பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச் சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். சுபநிகழ்ச்சி ஒன்று ஏற்பாடாகும். சிலருக்கு வீண் அலைச்சல் உண்டாகலாம். உற்சாகம் பெறுவீர்கள்.

**கடகம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள்.

**சிம்மம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு கிடைக்கும். தேவையற்ற விவாதங்களைத் தவிர்க்கவும். பேசும்போது பதற்றம் தவிர்க்கவும்.

**கன்னி:** எதிர்பார்த்துக் காத்திருந்த நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம். காரியம் சாதகமாக முடியும்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது. ஆனால், சிலருக்கு அதிகப்படியான செலவு களால் கடன் வாங்க நேரிடும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும்.

**விருச்சிகம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தந்தை ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். முயற்சி சாதகமாகும்.

**தனுசு:** மனதில் இனம் தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும். சிரமங்கள் ஏற்படும். மனதில் சற்று சஞ்சலம் ஏற்படும்.

**மகரம்:** ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். கவனமாக இருக்கவும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பணிகளுக்காக சற்று அலைச்சல் ஏற்படும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மீனம்:** மன உறுதியுடன் செயற்படுவீர்கள். எதிர்பாராத பணலாபம் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மகிழ்ச்சி உண்டாகும். குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.

## வவுனியாவுக்கு நேரில் சென்ற உலக வங்கியின் பிரதிநிதிகள்

வவுனியா, மே 27

உலக வங்கியின் நிதிப்பங்களிப்பில் வவுனியா மாவட்டத்தில் செயற்படுத்தப்படும் வேலைத்திட்டங்களை உலக வங்கி பிரதிநிதிகள் நேற்றுச் சென்று பார்வையிட்டனர்.

வவுனியா நெளுக்குளத்திலுள்ள விவசாய திணைக்களக் கட்டடத்தில் உலக வங்கியின் நிதிப்பங்களிப்பில் கலப்பின சோளச் செய்கை முன்னெடுக்கப்படுகிறது.

இந்தச் செய்கை தொடர்பில் உற்பத்தியாளர்களை சந்தித்து கலந்துரையாடிய உலகவங்கி பிரதிநிதிகள், அவர்களுக்கு இயந்திரத் தொகுதிகளையும் வழங்கினர்.

சந்திப்பில் உலக வங்கியின் திட்டப் பணிப்பாளர் ஜோன், வவுனியா பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ். அற்புதசந்திரன் உட்படப் பலர் பங்கேற்றிருந்தனர். (ச-110)




சாய்ராம்

## 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
**புவனேஸ்வரி அம்பலவாணர்**



தோற்றம் 18.08.1926 மறைவு 02.06.1998

திதி:- 27.05.2023

எம் குடும்பத்தின்
குலவிளக்காய் இருந்து
எம் அனைவருக்கும்
நல்லொளி காட்டிய
எம் அன்புத் தாயே நீங்கள்
இவ் உலகை
பிரிந்தபோதும் எங்கள்
நெஞ்சங்களில் என்றும்
அழியாத சித்திரமாய்
நிறைந்திருப்பீர்கள்.

எங்கள் அன்பு தாயின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர்

அம்பலவாணர் குடும்பம்.
011 252 4118

(CS/25066)AH-1

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 05.01.1926 மறைவு 26.05.2023

எமது ஸ்தாபன உரிமையாளரான **திரு. ஸ்ரீதரசிங்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி பாக்கியம் பூபாலசிங்கம்**

**(ஸ்தாபகர் பூபாலசிங்கம் புத்தகசாலை)**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பணியாளர்கள்
P.சந்திரிக்கா, P.துவாரகன், [illegible]
பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம்.

(CS 25074) A-1

## காணவில்லை



**சின்னத்துரை தியாகராசா (தியாகு)**

**வயது 73** என்பவரை கடந்த (20.05.2023) சனிக்கிழமை தொடக்கம் காணவில்லை. இவர் தொடர்பான தகவல் அறிந்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்பு கொள்ளவும்.

**077 204 9369, 077 968 3213**

(CS 706)AH-1


## ஆதன உரிமைமாற்ற அறிவித்தல்

### வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை - மானிப்பாய் பட்டின உபஅலுவலகம்

**விண்ணப்பதாரரின் பெயர் : பிரசன்னா மாலினி**

**முகவரி : ஆதன இல 15, அதிகார் செல்லமுத்து வீதி, வட்டாரம் 12**

வட்டாரம் 12, அதிகார் செல்லமுத்து வீதி, ஆதன இலக்கம் 15 இல் அமைந்துள்ள உறுதியின் பிரகாரம் வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் தென்மேற்குப்பகுதி மானிப்பாய் கோவிற்பற்று "நாச்சுக்குன்றன் வளவு" எனும் பெயருள்ள நிலப்பரப்பு 02 குளி 12.76 விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் இல-12-5/3,மெல்பேர்ன் அவெனியூ, கொழும்பு-04 எனும் முகவரியில் வசிக்கும் இராஜநாதன் தயாநாதன் மற்றும் இராஜநாதன் விமலநாதன் ஆகியவர்களால் இவ் ஆதனத்தின் உரிமையாளர்கள் தாமே என பிரசித்த நொத்தாரிசு வினிதா செந்திற்குமரன் அவர்களால் எழுதப்பட்ட 1443ஆம் இலக்க 06.02.2013ம் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தியுள்ளார்கள். மேலும் இவ் ஆதனம் பிரசித்த நொத்தாரிசு வினிதா செந்திற்குமரன் அவர்களால் எழுதப்பட்ட 1444ம் இலக்க 06.02.2013ஆம் திகதிய உறுதி மூலம் இராஜநாதன் தயாநாதன் தனக்குரிய அரைவாசி பாகத்தையும் இராஜநாதன் விமலநாதன் என்பவருக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். இராஜநாதன் விமலநாதன் இறந்த பின்பு அவரது மனைவி வதனி விமலநாதன் மற்றும் மகள் வித்யா விமலநாதன் ஆகியோரால் பிரசித்த நொத்தாரிசு வினிதா செந்திற்குமரன் அவர்களால் எழுதப்பட்ட 5186ஆம் இலக்க 03.11.2021ம் திகதிய உறுதி மூலம் இராஜநாதன் தயாநாதன் என்பவருக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்கள். இராஜநாதன் தயாநாதன் என்பவர் பிரசித்த நொத்தாரிசு கபிலன் வில்லவராஜன் அவர்களால் எழுதப்பட்ட 407ஆம் இலக்க 25.10.2022ஆம் திகதிய உறுதி மூலம் மாலினி பிரசன்னா என்பவருக்கு அறுதியாக இவ் ஆதனத்தை வழங்கியுள்ளார்.

**ஆதன விபரம்**

நில அளவையாளர் S.கனகராசன் அவர்களால் வரையப்பட்ட 1869ம் இலக்க 10.04.2014ம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் "நாச்சுக்குன்றன் வளவு" நிலப்பரப்பு 02 குளி 12.76 கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு.

**வடக்கு** - வீதி
**கிழக்கு** - சிற்றம்பலம் தம்பையா மற்றும் உரிமைக்காரர்களின் ஆதனம்
**தெற்கு** - நாகரட்ணம் சங்கரதாஸின் ஆதனம்
**மேற்கு** - தம்பிப்பிள்ளை சின்னத்தம்பியின் ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை மாலினி பிரசன்னா என்ற பெயரில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,**
**மானிப்பாய்.**

(CS560)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளொரு நல்வார்த்தை

''கஷ்டங்கள், நஷ்டங்கள் அடைந்தபின் மனிதர்கள் அதிக அடக்கத்தையும் அறிவையும் பெறுகின்றனர்'' — பிராங்க்ளின்

## போராட்டங்களே கவசங்கள்!

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொல்லியல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் அனைத்து அளவீட்டுப் பணிகளும் நிறுத்தப்பட வேண்டும் என்று புத்தசாசன மற்றும் சமய விவகார அமைச்சர் விதுர விக்ரமநாயக்க திடீர் ஞானம் பெற்றவர் போல உத்தரவிட்டிருக்கின்றார். ஆனால் அவரது உத்தரவைத் தொல்லியல் திணைக்களம் கணக்கில் எடுக்குமா என்பது சந்தேகமே.

தமிழர் பகுதிகளில் தொல்லியல் திணைக்களத்தின் பெயரில் மேற்கொள்ளப்படும் பௌத்தமயமாக்கலும், நில ஆக்கிரமிப்பும் இன்று ஆரம்பித்தது அல்ல. பல ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக இந்த ஆக்கிரமிப்பு புத்தரின் பெயராலும், தொல்லியல் அடையாளத்தாலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த ஆக்கிரமிப்புகள் தொடர்பாக பெரும்பான்மையின அரசியல் தலைவர்களுக்கு தமிழர் தரப்புப் பல்வேறு தடவைகள் சுட்டிக்காட்டியிருக்கின்றது. பெரும்பான்மையின அரசியல் தலைவர்களும் அத்தகைய ஆக்கிரமிப்புகளை நிறுத்துவதாக வாக்குறுதிகளை அள்ளி வழங்கியிருக்கின்றார்கள்.


தற்போதைய ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்க முதல் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச எனப் பலம் மிக்க பலர் இந்த விடயத்தில் தமிழ் மக்களுக்கு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியிருந்தனர். ஆனால் எதுவுமே நடைபெறவில்லை. வடக்கு, கிழக்கு தமிழர் தாயத்தில் மேற்கொள்ளப்படும் போராட்டங்களே தமிழர்களுக்கு கவசங்கள்!

பௌத்த மயமாக்கல், நில ஆக்கிரமிப்புகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிய அவர்கள், கூட்டங்களில் வைத்து ஆக்கிரமிப்புப் பணிகளை முன்னெடுத்த அதிகாரிகளைக் கடிந்தும் இருக்கின்றனர். ஆனால் இன்றுவரை இந்த ஆக்கிரமிப்புகள் தொடர்ந்தவண்ணமே இருக்கின்றன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நீதிமன்றங்களின் கட்டளைகள் கூட இந்த விடயத்தில் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. சட்டத்தை நிலைநாட்ட வேண்டிய பொலிஸார் தமிழர் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்புகளுக்கு ஒத்தாசையாக வாய் பொத்தி – வாலாட்டி நிற்கின்றனர். வர்த்தமானியில் தொல்லியல் பிரதேசம் என்று வரையறுக்கப்படாத வெடுக்குநாறி மலையில் ஒரு ஏணி பொருத்தியமைக்காக நீதிமன்றத்தை நாடிய பொலிஸார், தொல்லியல் பிரதேசமாக வர்த்தமானி மூலம் வரையறுக்கப்பட்ட குருந்தூர் மலையில் விகாரை கட்டப்பட்டபோது நவதுவாரங்களையும் மூடியிருந்தனர்.

தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரை சத்தமில்லாது இரகசியமாகத் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது. பேருந்துகளில் தென்பகுதியில் இருந்து அழைத்துவரப்பட்டவர்களின் பங்கேற்புடன் அதிகாலைவேளை கள்ளத்தனமாக விகாரை திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது. தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருக்கும் விகாரையை அகற்ற வேண்டும் என்று தமிழ் மக்கள் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வருகின்றனர். போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீதும் அரசியல்வாதிகள் மீதும் ஊடகவியலாளர்கள் மீதும் காட்டுமிராண்டித்தனமாகச் செயற்பட்ட பொலிஸார், சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரைக்குப் பாதுகாப்பு வழங்கியிருக்கின்றனர்.

பெரும்பான்மையினருக்கு ஒரு சட்டம், சிறுபான்மையினருக்கு ஒரு சட்டம் என்றுள்ள இந்த நாட்டில் ஒரு அமைச்சரான விதுர விக்ரமநாயக்கவின் உத்தரவு எந்தளவுக்கு நடைமுறைப்படுத்தப்படும்? நாட்டின் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் உத்தரவுகளும், நீதிமன்றங்களின் கட்டளைகளும் புறக்கணிக்கப்பட்ட கடந்தகால அனுபவங்களைக் கொண்ட தமிழ் மக்கள் விதுர விக்ரமநாயக்கவின் இந்த உத்தரவுடன் அனைத்துப் பிரச்சினைகளும் தீர்ந்துவிட்டன என்று நம்பிவிட முட்டாள்கள் அல்ல. இந்த ஆக்கிரமிப்புகளுக்கான நிலையான தீர்வு எட்டப்படும்வரை அவர்கள் தங்கள் போராட்டங்களைக் கைவிடப் போவதுமில்லை. போராட்டங்களே எப்போதும் எமக்கான கவசங்கள்!



# கட்டுப்பாடுகளைத் தளர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்

### மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

**கொழும்பு, மே 27**

**பொருளாதாரத்தின் ஸ்திரத்தன்மையுடன், கட்டுப்பாடுகள் பலவற்றை மேலும் தளர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.**

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பணவீக்க அதிகரிப்பு மற்றும் கொடுப்பனவு நிலுவை நெருக்கடியை கட்டுப்படுத்த இலங்கை தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். பணவீக்கம் எந்தவொரு பொருளாதாரத்துக்கும் முதல் எதிரியாகும். இப்போது அது குறைகிறது.

எந்தவொரு கூட்டுக் கொள்கை நடவடிக்கைகளும் வணிகங்கள் மற்றும் குடும்பங்களுக்கு வேதனையானவை என்றாலும், உயரும் பணவீக்கம் மற்றும் பொருளாதார ஸ்திரமின்மையின் பேரழிவுத் தாக்கங்களைத் தடுக்க இத்தகைய நடவடிக்கைகள் அவசியம்.

பணவீக்கத்தைக் குறைத்தல் மற்றும் கொடுப்பனவு நிலுவை நெருக்கடியைத் தீர்ப்பது போன்ற முக்கியமான நோக்கங்களுடன் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அதன் பலனை நாடு தற்போது அறுவடை செய்கிறது. மக்களைப் பாதிக்கும் கட்டுப்பாடுகள் படிப்படியாகத் தளர்த்தப்படும் - என்றார். (எ-இ)

# இறக்குமதித்தடை நீக்கத்தால் பங்குச் சந்தையில் வீழ்ச்சி!

கொழும்பு, மே 27

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் விதிக்கப்பட்ட இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்த அரசாங்கம் எடுத்த முடிவைத் தொடர்ந்து விற்பனை அழுத்தம் அதிகரித்ததால் இலங்கைப் பங்குகள் வியாழக்கிமை முடிவில் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளன என்று ஆய்வாளர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த இரண்டு வருடங்களில் அந்நியச் செலவணிப் பற்றாக்குறையால் தடை செய்யப்பட்ட 100 பொருள்களின் மீதான இறக்குமதிக் கட்டுப்பாட்டை நீக்க அரசாங்கம் திட்டமிட்டுள் ளது. இந்தத் தடை சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இறக்குமதி தடை நீக்கப்படுவதால் உள்நாட்டு சில்லறை விற்பனையாளர்களின் ஏகபோக அதிகாரங்கள் குறையலாம் என எதிர்பார்க்கப்படும் நிலையில், விற்பனை அழுத்தங்கள் காரணமாக பங்குகளின் பெறுமதி குறைந்துள்ளது என்று ஒரு பங்குச் சந்தை ஆய்வாளர் கூறினார்.

சந்தையின் எதிர்மறை உணர்வுக்கு முக்கியமான காரணம், இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுவதால் உள்நாட்டு விநியோகஸ்த்தர்கள் தங்களின் ஏகபோகத்தை இழப்பதே ஆகும் என்று ஒரு ஆய்வாளர் கூறினார். (எ-இ)

நாளை

28.05.2023 ஞாயிற்றுக்கிழமை வைகாசி 14

சுபநேரம் : 08.52 - 10.22

ராகுகாலம் : 04.22 - 05.52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெட்டுக்களிக்குள உவர்நீரை நீக்க ரூ. 5 மில்லியன் உடன் ஒதுக்கீடு!

## நீர்ப்பாசன திணைக்களம் செயற்றிட்டம்

**யாழ்ப்பாணம், மே 27**

**நெடுந்தீவு வெட்டுக்களிக்குளத்தின் உவர்த்தன்மையைப் போக்கி குளத்தை புனரமைப்புச் செய்ய நீர்ப்பாசனத் திணைக்களம் 5 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.**

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் கடந்த அமர்வில் குளத்தின் வறட்சி நிலைமை மற்றும் முறையான திட்டமிட்டலின்மையால் நிதி வீண்விரயம் ஆகியமை குறித்து சுட்டிக் காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் முறையான செயற்றிட்டத்தினூடாக குறித்த குளம் புனரமைப்புச் செய்யப்படவேண்டும் என்று தெரிவித்தார்.

அதற்மைய இந்த விடயம் தொடர்பில் நெடுந்தீவு பிரதேச செயலரை வினவியபோது: 2019 ஆம் ஆண்டிலிருந்து குறித்த குளத்தில் நீர் வற்றாத போதும் உவர்த்தன்மை ஏற்பட்டுள்ளது.

இந்தக் குளத்தின் கீழ் 24 குடும்பங்கள் இணைந்து இறால் வளர்ப்பில் ஈடுபடுகின்றன. இந்த வருடம் இதுவரை இறால் வளர்ப்பு இடம்பெறவில்லை.

குறித்த குளத்துக்கு பின்னாலுள்ள பெரியகளிக்குளத்திலிருந்து வெட்டுக்களிக்குளத்துக்கான நீரோட்டப் பாதையில் தடையேற்படுத்தப்பட்டமையால் குளத்தில் உவர்த்தன்மை ஏற்பட்டுள்ளது.

பெரிய் களிக்குளத்திலிருந்து நன்னீர் பெறப்பட்டு வெட்டுக்களிக் குளத்தினூடாக உவர் நீர் கடத்தப்பட்டால் எதிர்காலத்தில் நன்னீர் கிடைக்கப் பெறுவதுடன் இறால் வளர்ப்பாளர்களின் வாழ்வாதாரமும் காப்பற்றப்படும்.

நீர்ப்பாசனத் திணைக்களம், 5 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் குளத்தின் உவர்த்தன்மையைப் போக்கி குளத்தை புனரமைப்பு செய்யவுள்ளது- என்றார் (ச-125)


## ஊடகப்பேராளுமை நினைவுகள் பகிர்வு

வவுனியா, மே 27

ஊடகப்பேராளுமை பொன்னையா மாணிக்கவாசகத்தின் 45ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வு வவுனியா ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் வவுனியா நகரமண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சிரேஷ்ட ஊடகவியலாளர் நவரத்தினம் கபில்நாத் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் வரவேற்புரையை வவுனியா ஊடக அமையத்தலைவர் பரமேஸ்வரன் கார்த்தீபன் நிகழ்த்தவுள்ளார்.

தொடர்ந்து நினைவுரைகளை 'ஊடகவியலில் மாணிக்கவாசகம்' எனும் தலைப்பில் சிரேஷ்ட ஊடகவியலாளர் ரத்துகமகேயும், 'கலை பண்பாட்டு வளர்ச்சியில் மாணிக்கம்' எனும் தலைப்பில் வவுனியா வடக்கு பிரதேச கலாசார உத்தியோகத்தர் வீ.பிரதீபனும், 'மக்கள் சேவையில் மாணிக்கவாசகம்' எனும் தலைப்பில் தமிழ் விருட்சம் சமூகஆர்வலர் அமைப்பின் தலைவர் செ.சந்திரகுமாரும், 'வாசகர் பார்வையும் அனுபவப் பகிர்வும்' எனும் தலைப்பில் சட்டத்தரணி ஐயம்பிள்ளை யசோதரனும் ஆற்றவுள்ளனர். (ச-110)



## உடுவில் நாகம்மாள் வீதி சீரமைப்பு பணி ஆரம்பம்

வலிகாமம் தெற்குப் பிரதேசசபைக்குட்பட்ட உடுவில் நாகம்மாள் வீதியின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் 79 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் இந்த வீதி புனரமைப்பு செய்யப்படுகிறது.

அதிகளவான மக்கள் அன்றாடம் பயணிக்கும் இந்த வீதியால் மழை காலங்களில் பயணிக்க முடியாத நிலை ஏற்படுவதுடன் அன்றாடச் செயற்பாடுகளைக் கூட மேற்கொள்ள முடியாத நிலை காணப்பட்டது.

கடந்த அரசாங்கத்தின் ஒரு லட்சம் கிலோமீற்றர் வீதிகள் புனரமைப்புத் திட்டத்தில் இந்த வீதிப் புனரமைப்புக்கு அடிக்கல் நட்டபோதும் நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக வேலைகள் இடைநிறுத்தப்பட்டன. இந்துநிலையில் நீண்ட காலமாக புனரமைக்கப்படாத நிலையிலுள்ள இந்த வீதியை மக்களின் கோரிக்கைக்கமைய வலிகாமம் தெற்கு பிரதேசசபை புனரமைப்பு செய்கின்றது. (ச-125)



## காணி மீட்புத் தொடர்பாக கிளிநொச்சியில் கூட்டம்!

கிளிநொச்சி, மே 27

கிளிநொச்சி மாவட்டத்தில் வன உயிரிகள் திணைக்களத்திடமிருக்கும் காணிகளை விடுவித்தல் மற்றும் காணிப்பிரச்சினைகளுக்கான தீர்வுகள் குறித்து கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் வன உயிரிகள் திணைக்கள அதிகாரிகளுடன் இந்தக் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

கலந்துரையாடலில் மக்களது காணிகள், விவசாய நிலங்கள், அரச தேவைக்கான காணிகள் போன்றவற்றை குறித்த திணைக்களத்திடமிருந்து விடுவித்தல், பிரச்சினைகளுக்கான வழிவகைகள் குறித்து ஆராயப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலின் போது வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கான ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் இளங்கோவன், வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களங்களின் தலைமைச்செயலக அதிகாரிகள், மாவட்ட அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், அரச அதிகாரிகள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர். (ச-113)

## திருமஞ்சத் தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், மே 27

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்துக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட திருமஞ்சத்தின் வெள்ளோட்டம் நாளைமறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து திருமஞ்சத்தை வடிவமைத்த சிற்பாசாரியார் செ.பாலச்சந்திரனை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (ச-17)

## கசிப்புடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், மே 27

கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவரை தெல்லிப்பழைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர்.

அச்செழு நீர்வேலிப் பகுதியில் கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து ஒன்றரை லீற்றர் கசிப்பும் குப்பிளான் தெற்கில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து அரைப்போத்தல் கசிப்பும் மீட்கப்பட்டுள்ளன என தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்து நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-125)

## உதைபந்துச் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், மே 27

வடமராட்சி உதைபந்தாட்ட சிரேஷ்ட சங்கத்தால் 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நடத்தப்படவுள்ளது.

இதில் கரவெட்டி, பருத்தித்துறை மற்றும் மருதங்கேணி ஆகிய பிரதேச செயலகங்களில் பதிவுசெய்த கழகங்கள் பங்குபற்ற முடியும்.

பங்குபற்ற விரும்பும் கழகங்கள் சுற்றுப்போட்டி தொடர்பான விவரங்களை 0768531257, 0777286315 என்ற தொலைபேசி எண்ணூடாக தொடர்புகொண்டு சங்கத்தின் தலைவர், செயலாளர் ஆகியோரிடம் பெறலாம் என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச)

## சங்கானை - சண்டிலிப்பாயில்

# ரூ. 15 மில்லியன் ஒதுக்கீட்டில் வயலின் உப்புச்செறிவு ஆய்வு

யாழ்ப்பாணம், மே 27

சண்டிலிப்பாய், சங்கானை பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள வயல் நிலப்பரப்புகளில் உப்பு செறிவை அடையாளம் காண்பதற்கான ஆய்வு 15 மில்லியன் ரூபாய் செலவில் முன்னெடுக்கப்படவுள்ளது. வடக்கு மாகாண விவசாயத் திணைக்களம் [illegible] மற்றும் முன்மொழிவைச் சமர்ப்பித்துள்ளது. யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் கடந்த அமர்வில் குறித்த வயல் நிலப் பரப்புக்களில் உவர்த்தன்மை அடையாளபடுத்தல் தொடர்பில் ஆராயப்பட்டது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்த விடயம் தொடர்பில் வடக்கு மாகாண விவசாயத் திணைக்களத்துக்கு அறிவுறுத்தினார். அதற்கமைய சங்கானை மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளினூடாகச் செல்லும் வழுக்கையாற்றின் இருபுறங்களிலும் காணப்படும் வயல்பரப்புகளின் உவர்த்தன்மை தொடர்பில் பரிசோதனைகளை 15 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்வதற்கான திட்ட வரைவை விவசாயத் திணைக்களம் முன்மொழிந்துள்ளது. (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் இந்துமதி நடேசு

தோற்றம் 24.02.1950 மறைவு 20.05.2021

திதி:- வளர்பிறை அட்டமி
(27.05.2023)

மறந்திருக்க நினைத்தாலும் அம்மா
உங்கள் திருவுருவம்
மங்காத காட்சியாய் மனத் திரையில் தோன்றுதம்மா
உங்கள் ஓசை எம் செவியில் மதுரமாய் கேட்குதம்மா
அம்மா! உங்கள் ஆத்மா சாந்தியடையத்
துதிக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இல.381,
கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்...
குடும்பத்தினர்.

(CS/50536)AH-1

# வயோதிபரின் சடலம் மீட்பு

கொழும்பு, மே 27

வயோதிபர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


கந்தானை வெலிகம்பிட்டிய பகுதியில் வசித்து வந்த 84 வயதுடைய ஜாஎல பகுதியைச் சேர்ந்த நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இரு கைகளும் கட்டப்பட்ட நிலையில் முகம் மற்றும் கழுத்துப் பகுதி துணியொன்றால் சுற்றப்பட்ட நிலையில் சடலம் காணப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த நபரின் புதல்வி வழங்கிய தகவலுக்கு அமையவே சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உடலில் அடிகாயங்கள் காணப்படுவதால் அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-22)

## இன்னுலகில்
## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி

(23.05.2023)



### திரு. ஜோசப் குப்படினோ ஜேசுதாசன் மனுவல்பிள்ளை

தோற்றம் 18.09.1933 மறைவு 23.04.2023

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில்
விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்"
என் சீவியத்தில் என்னை நேசித்தவர்களே
என் மரணத்திற்கு பின்னும் என்னை மறவாதீர்கள்

40/R, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

இவரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(cs.50506) (N-1)

# விளை நில தரவுகளை பதிவு செய்ய அறிவுறுத்தல்


சாவகச்சேரி, மே 27

தென்மராட்சி தெற்கு, கைதடி, நாவற்குழி கமக்கார அமைப்புக்குட்பட்ட விளைநிலங்கள் தொடர்பான தரவுகள் பற்றிய பதிவுகளை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளவேண்டும் என்று அமைப்பின் தலைவர் ஐ.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

அமைப்பின் எல்லைக்குட்பட்ட விளைநிலங்களின் விவரங்கள் ஜூன் முதலாம் திகதி கையளிக்கப் படவுள்ளதால் அமைப்பின் அங்கத்தவர்கள் தமது விவரங்களை பதிவு செய்ய வேண்டும் என்று அவர் அறிவுறுத்தியுள்ளார். (எ-9)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 01 - 03 - 1956



மறைவு 30 - 05 - 2020

### அமரர் ஆறுமுகம் உருத்திரமூர்த்தி

(திதி: அட்டமி (27.05.2023)

சுதுமலை அம்மன் கோவிலின்
நிரந்தர தொண்டனாய்
அடியார்களுக்கு அடியவர் ஆனாய்
அம்பாளுக்கு ஓர் அபிராமிப்பட்டரானாய்
நான் பார்த்த முதல் முகம்
நான் பேசிய முதல் வார்த்தை
நான் மறக்க முடியாத முதல் ஓவியம் என் தெய்வமே!
மூன்று ஆண்டுகள் ஆனாலும் உங்கள் நினைவுகளைச்
சுமந்தவளாய் இருப்பேன் தெய்வமே!
என் உயிர் உள்ளவரை உங்கள் நினைவுகள் (தொடரும்)
உங்களை என் உள்ளத்தில் வைத்து பூசிப்பேன் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
அப்பாளை பிரார்த்திக்கின்றேன்.

ஆருயிர் மனைவி
உருத்திரமூர்த்தி பவானி
(ஆசிரியர்)

சுதுமலை வடக்கு,
சுதுமலை.

## உங்கள் நினைவுகளுடன் ஓராண்டு



### திருமதி செல்வராணி சகாதேவன்

(ஓய்வுநிலை அதிபர் - யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை)

மண்ணில் 27.09.1952

விண்ணில் 07.06.2022

ஒரு ஆளுமைப் பெண்ணாக ஒரு
குடும்பத் தலைவியாக எம்முடன் வாழ்ந்த
உங்கள் வாழ்வின் நினைவுகளையும்
பெருமைகளையும் என்றும் நன்றியுடன்
நினைவுகூர்ந்து நிற்போம்...

டடா, சனா, வாசுகி,
நிலாஷன்.

செல்வ நிலாவகம்,
250, (47) புகையிரத நிலைய வீதி, கொக்குவில்.

(CS/50555)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரணி மத்திய கல்லூரியின் 1999ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தர அணி பழைய மாணவர்களால் வரவேற்பு நிகழ்வுகளுக்கு பயன்படுத்துவதற்கென பாரம்பரிய தமிழ் இன்னிசை வாத்திய இசைக்கருவிகள் கடந்த 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபரிடம் கையளிக்கப்பட்டன. (ய-9-159)



சண்டிலிப்பாய்ப் பிரதேசசெயலகத்தில் பிரதேச மட்ட டெங்குக் கட்டுப்பாட்டுக் குழுக் கூட்டம் மேற்படி பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ய-66)



வரலாற்றுப் பிரசித்திபெற்ற சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் முத்தேர் பவனி கடந்த 18ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற்றது. (ய-66)



மன்னார் - நானாட்டான் - பள்ளங் கோட்டை கிராமத்தில் புதிதாக அமைக்கப் பட்ட புனித அந்தோணியார் ஆலயத்தின் அபிஷேகமும் திறப்பு விழாவும் மன்னார் மறைமாவட்ட ஆயர் அருட்கலாநிதி இம் மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலை தலைமையில் கடந்த 20ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது. (ய-213)

# குருதிக்கொடை



கொக்குவில் பொற்பதி சனசமூக நிலையத் தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை குருதிவங்கிப் பிரிவின் அனு சரணையில் மாபெரும் குருதிக் கொடை முகாம் கொக்குவில் பொற்பதி விநாயகர் ஆலயத்தில் அமைந்துள்ள தனியார் இல்லத் தில் கடந்த 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ய-66)



யாழ். உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை குருதிவங்கிப் பிரி வின் அனுசரணையில் மாபெரும் குருதிக் கொடை முகாம் கடந்த 18ஆம் திகதி வியா ழக்கிழமை மேற்படி கல்லூரியில் இடம் பெற்றது. (ய-66)



வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் கள் சங்கம் யாழ்ப்பாணம் போதனா மருத்து வமனை குருதிவங்கிப் பிரிவினரின் அனுசர ணையில் ஏற்பாடு செய்த மாபெரும் குருதிக் கொடை முகாம் கடந்த 17ஆம் திகதி புதன் கிழமை நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. (ய-66)



கிளிநொச்சி தெற்கு வல யத்துக்குட்பட்ட கரைச்சிக் கோட்டப் பாடசாலை களுக்கு இடையிலான 2023ஆம் ஆண்டுக்கான மெய்வன்மை திறனாய்வுப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வுகள் றொட்றிக்கோ பொது விளையாட்டு மைதா னத்தில் கடந்த 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

வெற்றி பெற்ற மாணவர்கள் சான்றிதழ் மற்றும் வெற்றிக் கேடயங்கள் விருந்தினர் களால் வழங்கிக் கௌரவிக் கப்பட்டனர். (ய-159)



பொருளாதார நலிவுற்ற சிறுவர்கள், கர்ப்ப வதிகளைக் கொண்ட 21 குடும்பங்களுக்கு சத்துணவுப் பொருள்கள் வழங்கும் திட்டம் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகன தாஸ் சுவாமிகள் தலைமையில் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த 16ஆம் திகதி செவ் வாய்க்கிழமை இடம்பெற்றது. (ய-66)




தென்மராட்சி கல்வி வலய தகவல் தொழில் நுட்பம் மற்றும் தொலைக்கல்வி மத்திய நிலையத்தில் நடத்தப்பட்ட கணிணி மற்றும் ஆங்கிலம் ஆகிய பாட நெறிகளை நிறைவு செய்த 53 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங் கும் நிகழ்வு வலய கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ய-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் : 19 : 09 : 1947

மறைவு : 26 : 05 : 2023



## இராமு நவரட்ணம் (இத்தாலி நவா)

அராலியைப் பிறப்பிடமாகவும் நாப்போலி இத்தாலியில் வசித்தவரும் தற்போது முடவேம்படி சுன்னாகத்தில் வசித்தவருமாகிய இராமு நவரட்ணம் நேற்று (26.05.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமு தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நடராசா மற்றும் மனோன்மணி தம்பதியரின் பாசமிகு மருமகனும், வசந்தியின் அன்புக் கணவரும், நல்லமுத்து காலஞ்சென்ற இராசமணி மற்றும் பொன்னுத்துரை, காலஞ்சென்ற நடராசா மற்றும் சுப்பிரமணியம், பொன்ராசா, இராசையா, பொன்மலர், தங்கவேலு (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மனோராணி, காலஞ்சென்றவர்களான சாந்தி, மனோராஜன் மற்றும் சுமதி (சுவிஸ்), இரவிச்சந்திரன், சுதன், கவிதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.05.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல.283/46, முடவேம்படி,**
**சுன்னாகம் வடக்கு, சுன்னாகம்.**

**தகவல்:**
**மனைவி - வசந்தி**
**T.P:077 1178 225**

(CS 25072) A-1

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு : 24 : 10 : 1951

உதிர்வு : 19 : 05 : 2021



அமரர்

## ஜெயலஷ்மி குகபாஸ்கரன்

**திதி: 27.05.2023**

அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணமாய் இனிதே
வாழ்ந்த கருணையானவளே வானில் உறையும்
தெய்வத்துடன் இணைந்து ஈராண்டு கடந்தபின்னும்
எங்கள் நினைவுகளில் என்றும் நிறைந்து உள்ளீர்.

**கணவர் - ச.குகபாஸ்கரன்**
**071 847 4592**

*பிரிவால் துயருறும்*
**குடும்பத்தினர்**

(cs 50488) (N-1)

# மரண அறிவித்தல்

அன்னையின் மடியில்
**05.01.1926**

## திருமதி பாக்கியம் பூபாலசிங்கம்

**(ஸ்தாபகர் - பூபாலசிங்கம் புத்தகசாலை)**

அன்னையின் அடியில்
**26.05.2023**



நயினாதீவு 7ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், கொட்டடி யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு வெள்ளவத்தை ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் பூபாலசிங்கம் அவர்கள் நேற்று (26.05.2023) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும், இராமுப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஆர்.ஆர்.பூபாலசிங்கம் (ஸ்தாபகர் - பூபாலசிங்கம் புத்தகசாலை) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற புவிராஜசிங்கம், ஸ்ரீதரசிங், விமலாதேவி, இராஜன் பூபாலசிங்கம், காலஞ்சென்ற பகவான், கார்ல் மார்க்ஸ், கல்யாணி, மல்லிகை, முல்லை ஆகியோரின் அன்புத் தாயாரும், தங்கம்மா, காலஞ்சென்றவர்களான கந்தையா, சங்கரப்பிள்ளை, இராமலிங்கம், பொன்னம்மா, மாணிக்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சேகரன், நாகேஸ்வரி, மல்லிகாவதி, சாந்தசொரூபி, பிரபானந்தா, சுபோதீஸ், தயானந்தா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை தங்கரத்தினம், விஜயரத்னம், அப்பாத்துரை, கணேசன், பூமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், பிரசன்னா, பிரதாபன் - வதனா, சுகன்யா - சிவஜனன், இந்துஷன், ஹர்ஷன், பானு, பிருந்தன், விதூஷன், பிரியா - சந்தீப், ஜெனா, ஷியான், ஜெயன், சஜன் ஆகியோரின் பாட்டியும், ஹரினி, ஆதி, அஷ்வி, மயுரா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கொழும்பு - வெள்ளவத்தை உருத்திரா மாவத்தையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு திங்கட்கிழமை (29.05.2023) முற்பகல் 10.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று, அன்றையதினம் பிற்பகல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## வைத்திய கலாநிதி வேலாயுதம் சாரங்கன்



**தோற்றம்**
**30.09.1985**

**மறைவு**
**25.05.2023**

சாவகச்சேரியை பூர்வீகமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிட மாகவும் கொண்ட வைத்திய கலாநிதி வேலாயுதம் சாரங்கன் கடந்த (25.05.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வேலாயுதம் (சட்டத்தரணி) சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், சீவாமிர்தம் புனிதவதி தம்பதியரின் அன்பு மருமகனும், வைத்திய கலாநிதி ருசாந்தினியின் அன்புக் கணவரும், வசீகரன் (முகாமையாளர் HNB திருநெல்வேலி), சாமந்தி (சட்டத்தரணி) ஆகி யோரின் பாசமிகு சகோதரரும், பிரஜென்சி (அபிவிருத்தி உத்தி யோகத்தர், விவசாயத் திணைக்களம், வடக்கு மாகாணம்) மற்றும் திவாகரன் (முகாமையாளர், கொமர்ஷல் வங்கி, சாவகச்சேரி) ஆகியோரின் மைத்துனரும், அபிநயன், ஆரத்யா ஆகியோரின் சிறிய தந்தையாரும், ஆதன்ஜன், அனுஸ்ரீ ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.05.2023) ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக் கிரியைக்காக கட்டை ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**இருபாலை வீதி,**
**கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.**

**தொடர்பு:**
**வசீகரன் - 0777 537 930,**
**திவாகரன் - 0777 155 435**

(CS 24604)A-1

# மரண அறிவித்தல்

## திரு.ஐயாத்துரை தெட்சணாமூர்த்தி

### (ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர் - தபால்)



**தோற்றம்**
**29.08.1931**

**மறைவு**
**23.05.2023**

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் கனடா, இந்தியா, கொழும்பு மற்றும் தொட்டிலடி சண்டிலிப்பாய் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. ஐயாத்துரை தெட்சணாமூர்த்தி கடந்த (23.05.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ரஞ்சிதமலரின் அன்புக் கணவரும், தயாளினி (லண்டன்), கலாலினி (கொழும்பு), மாலினி (கனடா), தயாளன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஆரா அமுதன், குணரத்தினம், குமரன், கவிதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பூபதி, விஜயதர்மா, சடாச்சரம் மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம், சந்திரவதனா மற்றும் நொயிலின், காலஞ்சென்ற நவரட்ணம் (பாலு) ஆகியோரின் மைத்துனரும், ஆர்த்தி, பிருந்தா (அரச சட்டவாதி, சட்டமா அதிபர் - திணைக்களம்), கோபிநாத் (எடின்பரோ பிறைவெற் லிமிற்றற்), பிரதீபன், ஷியானா, காவியா, காவியன் மற்றும் கிறிஸ்டியன், ரெஜிந்தன் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புப் பேரனும், ஆரன், ஆரியா, யாகவி, கயிலன் ஆகியோரின் பாசமிகு பூட்டனும், குனேந்திரன், இராஜேந்திரன், இராஜேஸ்வரி, பவானி, பகீரதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், தேவிகா, ஜானகி ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.05.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் (மில் ஒழுங்கை, சண்டிலிப்பாய்) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானம், பண்டத்தரிப்பிற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**

**இல.99, மில் ஒழுங்கை,**
**சண்டிலிப்பாய் தெற்கு,**
**சண்டிலிப்பாய்.**

076 892 1526, 077 018 2336

(cs.50571).(N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கியவெளி இதழ்கள் அறிமுகமும் உரையாடலும்

யாழ்ப்பாணம், மே 27

'இலக்கியவெளி இதழ்கள்' அறிமுகமும் உரையாடலும், நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் பொதுநூலக குவிமாடத்தில் இடம்பெறவுள்ளது.

எழுத்தாளர் ஐ.சாந்தன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. வடகோவை வரதராஜன், ந.குகபரன், வேல்.நந்தகுமார், இ.இராஜேஸ்கண்ணன், சின்னராஜா விமலன் ஆகியோர் நிகழ்வில் உரை நிகழ்த்தவுள்ளனர். (ம)

# மருந்தடித்த மாம்பழமே அதிகளவாக விற்பனை

## நுகர்வோர் விசனம்

யாழ்ப்பாணம், மே 27

யாழ்.குடாநாட்டுச் சந்தைகளில் இரசாயன மருந்து விசிறப்பட்டுபழுக்கவைத்த மாம்பழங்களே அதிகளவில் விற்பனை செய்யப்படுகின்றன. அதனை உண்பதால் நோய்த்தாக்கங்களே ஏற்படும் என நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய பருவகாலத்துக்கேற்ப மாம்பழங்கள் அதிகளவில் சந்தைகளுக்கு கொண்டுவரப்படுகின்றன. அதனால் அவற்றின் விலையும் வீழ்ச்சியடைந்து காணப்படுகிறது.

வியாபார நோக்கம் கருதி செயற்கை முறையில் இரசாயன மருந்து தெளித்து பழுக்கவைத்த மாம்பழங்களே அதிகளவில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

இரசாயன மருந்து விசிறப்பட்டு பழுக்க வைத்த மாம்பழங்களை உண்பதால் மக்கள் நோய்த்தாக்கங்களுக்கு ஆளாக நேரிடும்.

எனவே இந்த விடயத்தில் உணவுப் பாதுகாப்பு அதிகாரிகள் அக்கறைசெலுத்தி மருந்தடித்த பழங்களை விற்பனையிலிருந்து நீக்க வேண்டும் என நுகர்வோர் மேலும் சுட்டிக்காட்டினர். (ச-17)

### பொலிஸின்...

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம், தையிட்டியில் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு முரணாகவும், மக்களின் எதிர்ப்பை மீறியும் தனியார் காணிக்குள் இந்தத் தையிட்டி விகாரை சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த விகாரைக்கு எதிராக யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்களால் பலமுறை பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. எனினும் எந்தப் பயனும் இல்லை. இவ்வாறிருக்கையில் தையிட்டி விகாரைக்கு எதிராக கடந்த 23 மற்றும் 24ஆம் திகதிகளில் இடம்பெற்ற போராட்டங்களில் பொலிஸார் மூர்க்கத்தனமாக நடந்துகொண்ட விதம் தொடர்பில் இந்தச் சபைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தின்போது 9 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்தக் கைதின்போது பொலிஸார் செயற்பட்ட விதம் தொடர்பில் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதையடுத்து, போராட்டத்தின்போது பொலிஸார் நடந்துகொண்ட விதம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு நீதிமன்றம் யாழ்ப்பாணப் பொலிஸ் தலைமையகத்தைப் பணித்துள்ளது.

எனக்குக் கிடைத்த உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களின் பிரகாரம், இந்த அராஜக நடவடிக்கையை மேற்கொண்ட பலாலி பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி பல்வேறுபட்ட மோசடிகளுடன் தொடர்புடையவர். அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கொன்றும் நிலுவையில் உள்ளது. பொதுமக்களைப் பாதுகாக்கும் பணியில் பொலிஸார் ஈடுபடுகின்றனர் என்று சொல்லப்படுவதுண்டு. ஆனால், பொலிஸார் இங்கு பொதுமக்களை வேட்டையாடிக் கொண்டிருக்கின்றனர். இவ்வாறான கேவலமான விடயங்கள்தான் இந்த மண்ணில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரை வைத்தோ அதன் வரலாற்றை வைத்தோ எந்தப் பாடத்தையும் நீங்கள் கற்கவில்லை. வரலாற்றில் இருந்து நீங்கள் எதையும் எடுத்துக்கொள்ளவில்லை.

இந்த நாட்டில் பெரும்பான்மைச் சமூகம் சட்டத்தை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி இவ்வாறானதொரு பாதையைத் தேர்ந்தெடுத்துப் பயணிக்கின்றபோது, இந்த மண்ணுக்கு உரித்தான ஏனைய மக்கள் எவ்வாறு அதனை வேடிக்கை பார்ப்பார்கள்? 75 வருடங்களாக இடம்பெற்ற தவறை மீண்டும் மீண்டும் செய்து கொண்டு இருக்கின்றீர்கள். இந்தத் தவறை நீங்கள் திருத்திக்கொள்ளாத பட்சத்தில் இந்த நாடு தன் சொந்தக் காலில் எழுந்து நிற்பது சாத்தியமற்ற விடயமே. அடுத்த 75 ஆண்டுகளின் பின்னரும் உலக நாடுகளிடம் இந்த நாடு கையேந்தும் நிலைக்கு உங்களின் இத்தகைய செயற்பாடுகள்தான் காரணமாக இருக்கும் - என்றார். (அ-ம-26)

### நாடு முன்னேற...

நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன்.

எதிர்க்கட்சித் தலைவருக்கும், இரா.சம்பந்தனுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில், நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தனிடம் கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:-

'நாம் இருவரும் சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் பேசினோம். எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் பேசினோம். பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தி தொடர்பிலும் பேசினோம். அரசியல் தீர்வு குறித்தும் முக்கியமாக கவனம் செலுத்திப் பேசினோம். நாட்டில் சமாதானம், சமத்துவம் நிலவவேண்டுமெனில் பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தியில் முன்னேற்றம் ஏற்படவேண்டுமெனில் நிலையான நிரந்தர அரசியல் தீர்வு விரைந்து காணப்படவேண்டும் என்று சஜித் பிரேமதாஸவிடம் எடுத்துரைத்தேன். அதை அவர் ஏற்றுக்கொண்டார். மிகவும் முக்கியமான சந்திப்பு இது' - என்றார்.

இந்தச் சந்திப்பு குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிக்கையில்; 'நாட்டில் நிலவும் அரசியல் நிலைமைகள் தொடர்பில் இந்தச் சந்திப்பின்போது விரிவாக ஆராயப்பட்டது. நாட்டின் ஜனநாயகத்துக்கு ஏற்பட்டுள்ள மரண அடி மற்றும் பொருளாதார ரீதியாக ஏற்பட்டுள்ள வீழ்ச்சி குறித்தும் இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது' - என்றார். (அ-ம-22)

### முதியவரொருவர்...

தனியாக வசித்துவந்த முதியவர் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவித்துள்ளனர். இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26)

### ஹெரோய்னுடன்...

நடவடிக்கையின்போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். அவருக்கு 23 வயது. சந்தேநபரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (அ-ம-125)

### மருந்துத்...

தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் மருத்துவ பெருநெருக்கடி அதிகரித்துள்ளது. நோயாளிகளை மருந்துகளை வெளியில் கொள்வனவு செய்யுமாறே பல மருத்துவமனைகள் கோரி வருகின்றன. மருந்துகள் பலவற்றின் விலைகள் உச்சம் பெற்றிருப்பதால் நோயாளிகள் மருத்துகளை கொள்வனவு செய்வதும் சாத்தியமற்ற விடயமாக மாறியுள்ளது. கடந்த ஒன்றரை வருடங்களாக இந்த நிலை காணப்படுகின்றது. அத்துடன் நாளுக்கு நாள் இந்தப் பிரச்சினை தீவிரம் பெற்றுச் செல்கின்றது. வலிநிவாரணிகள், நீரிழிவுக்கான மருந்துகள், புற்றுநோயாளர்களுக்கான மருந்துகள் உட்பட 120 மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அறுவைச் சிகிச்சைச் சாதனங்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது - என்றார். (அ-ம)

### வயிற்றுவலியால்...

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த கனகரட்ணம் கம்சிகா (வயது - 3) என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

கடந்த 20ஆம் திகதி வயிற்று வலியால் அந்தக் குழந்தை பாதிக்கப்பட்டு அழுதுள்ளது. மருந்து எடுத்தும் வலி குறைவடையாததால் குழந்தை மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளது. எனினும் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று அந்தக் குழந்தை உயிரிழந்தது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டதுடன், உடற்கூற்றுப் பரிசோதனைக்கும் உத்தரவிட்டார். (அ-ம-26)

### தமிழரசுக்...

சிவஞானம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

என்னைப் பொறுத்தவரை நான் பதவிக்காகக் கட்சிக்குள் போகவில்லை. முரண்பாடு இல்லாத நிலை ஏற்பட்டு அனைவரும் ஏகமனதாகத் தெரிவுசெய்தால், போட்டியில்லாமல் அனைவரும் ஒத்துழைப்போடும் - இணக்கப்பாட்டோடும் தெரிவுசெய்தால் தலைமையை நான் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் உள்ளேன். ஒருமனதாக முரண்பாடு இல்லாமல் தெரிவுசெய்யப்பட்டால், அந்தக் கடமையைச் செய்யக்கூடிய ஆற்றலும், பொறுப்பும் எனக்கு ஏற்பட்டுவிடும். அதற்காக நான் யாரையும் குறை சொல்லியோ யாரையும் கழுத்தறுத்தோ பதவிக்குவர விரும்பவில்லை.

தலைமைக்குத் தகுதியுடையவர் என என்னைப் பலர் கேட்கின்றார்கள், சொல்கின்றார்கள் என்பது உண்மையாக இருந்தாலும் கூட, எங்களுடைய கட்சி ஒற்றுமையாக இயங்கவேண்டும். ஒருமனதாக போகவேண்டும் என்ற எண்ணம் எனக்குள்ளது. அவ்வாறான இணக்கப்பாடு வந்தால் அதை நான் ஏற்றுக்கொள்வேன் - என்றார். (அ-ம)

### மாணவர்கள்...

மாணவர்களின் 'சிகை அலங்காரம்' தொடர்பில் வினவியே அவர் தாக்குதலை நடத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. தாக்குதலுக்குள்ளான மாணவன் ஒருவரின் மூக்கால் இரத்தம் வடிந்தது என்றும், பிறிதொரு மாணவன் வீட்டில் மயக்கமுற்று வீழ்ந்தார் என்றும் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. இதையடுத்து அந்த ஆசிரியர் தெல்லிப்பழைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இது தொடர்பில் யாழ்ப்பாணம் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. (ம-20,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னைச் செய்கையை ஊக்குவிக்க தென்னம் நாற்றுக்கள் கையளிப்பு!

## தென்னை அபிவிருத்திச்சபை ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 27

வடக்கு மாகாணத்தில் தென்னைச் செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு ஒரு லட்சத்து 42 ஆயிரம் வரையிலான தென்னங்கன்றுகள் தென்னை அபிவிருத்திச்சபையால் வழங்கப் படவுள்ளன.

வடக்கின் மூன்று மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட இந்தத் தென்னங்கன்றுகள் இந்தாண்டின் இறுதிக்குள் வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணத்துக்கு 56 ஆயிரம் தென்னங்கன்றுகளும் கிளிநொச்சிக்கு 53 ஆயிரம் தென்னங்கன்றுகளும் முல்லைத்தீவுக்கு 33 ஆயிரம் தென்னங்கன்றுகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் தென்னங்கன்றுகளை செய்கையாளர்களுக்கு மானிய விலையில் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தென்னை அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது. (ச-17)


**விற்பனைக்கு**

நல்ல இன டோமன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

**077 055 8493**

கோண்டாவில் கிழக்கு

அருள்மிகு ஸ்ரீ ஞானப்பழனி முருகன் தேவஸ்தான

**திருமஞ்ச வெள்ளோட்டம்**

காலம் : 27.05.2023 (சனிக்கிழமை) மதியம் 12 மணி

**திருமஞ்சபெருவிழா**

காலம் : 28.05.2023 (ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணி

அனைத்து அடியவர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



**யாழ்ப்பாண பூப்பந்தாட்ட சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் - 2023**

**இடம் :**

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மண்டபம்.

**காலம் :**

04.06.2023

ஞாயிற்றுக்கிழமை

**நேரம் :**

காலை 10.00 மணி

மேற்படி பொதுக்கூட்டத்துக்கு யாழ்ப்பாண பூப்பந்தாட்டக் கழக அங்கத்தவர்களும் பாடசாலை பூப்பந்தாட்ட பொறுப்பாசிரியர்களும் கலந்துகொள்ள அழைக்கப்படுகின்றீர்கள்.

**தொடர்புகளுக்கு**

Mr.S.காண்டீபன் செயலாளர். 077 789 4924

Dr..S.அறிவுச்செல்வன் தலைவர். 077 757 0092

(CS/50568)AH-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இளவாலையில் 36 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.

* இளவாலையிலிருந்து மாதகல் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
* 18 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
* இளவாலை சந்தியில் இருந்து 1 KM தூரம்.
* திருமண மண்டபங்கள், வியாபார நிலையங்கள், சுற்றுலா விடுதிகள், வீடுகள் அமைக்க உகந்த இடம்.
* ஒரு பரப்பின் விலை : எட்டு லட்சம் ரூபாய் (800,000/=)

**தொடர்பு: 076 911 9371**
**076 165 3129**

## வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியான செய்தி

கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில் பிளாஸ்ரிக், பான்சி பொருட்கள், அலுமினிய பொருட்கள், சில்வர் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள், விளையாட்டு பொருட்கள், கிறீம் வகைகள், கவரிங் வகைகள், தையல் உபகரணங்கள், தையலுக்கு தேவையான மொடல் பட்டின்கள், மாபிள் பீங்கான்கள், றெஜிபோம் பெட்டிகள், பாட்டா வகைகள், மாஸ் வகைகள் அன்பளிப்பு பொருட்கள், கிளினர், திரவியங்கள், காண்வோஸ், கொம்போட், வாசனை திரவியம், மாபிள் கிளினர், றூம்ஸ்பிறே, மணிக்கூடு வகைகள் இவை அனைத்தும் 30 வீத கழிவுடன் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சரவணபவன் பான்சி ஹவுஸ்**

**26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன், யாழ்ப்பாணம்.**

உரிமையாளர்: தே. கலைத்தாசன் (கரன்) - 021 3155 900

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 18 பரப்புக் காணி விற்பனைக்கு.

* பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் வீதியில்.
* புத்தூர் பிரதான தண்ணீர் தாங்கி அருகாமையில்.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில், 18 அடி பாதையுடன்.
* ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்.

**தொடர்பு: 077 6385 683**
**076 7558 606**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 64 பரப்புக் காணி விற்பனைக்கு.

* கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 1/2 km தூரத்தில் பருத்தித்துறை வீதியில் இருந்து 1200 m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி).
* கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
* ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சத்தி ஐம்பது ஆயிரம் ரூபாய் (250,000/=) மட்டும்.

**தொடர்பு: 076 7390 413**
**076 4365 814, 077 065 4525**


## மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 03 . 1977



மறைவு 10 . 05 . 2023

### சண்முகம் சண்முகதாசன்

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் சண்முகதாசன் கடந்த (10.05.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் மற்றும் பூபதி தம்பதியரின் அன்பு மகனும், மகேந்திரன் (மகான்) இந்திரா தம்பதியரின் அன்பு மருமகனும், பிரதீபாவின் ஆருயிர்க் கணவரும், பத்மாவதி, பிரேமாவதி, புஸ்பராணி, பூலோகவதி, காலஞ்சென்றவர்களான சுசீலாதேவி, பூரணவதி, பூலோகதாசன் மற்றும் பாரதிதாசன், சௌந்தரராஜன், கண்ணதாசன் ஆகியோரின் சகோதரரும், சின்னத்துரை காலஞ்சென்றவர்களான விக்கினேஸ்வரன், தங்கமலர் மற்றும் மோகனதாஸ், ரதன், தங்கரத்தினம், நிர்மலா, பிரசாந்தி, பிரதாப், மனஸ்வினி ஆகியோரின் மைத்துனரும், அரவிந்தன், லிங்கேஸ்வரன் ஆகியோரின் சகலனும், கிருஷ்ணிகா, விஹான் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.05.2023) ஞாயிற்றுக்கிழமை Hendon Crematorium, Holders Hill Road, London NW7 1NM இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
க.மகேந்திரன் (மகான்)

ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

(cs 50410) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.